திருப்பூந்துருத்தி

அருள்மிகு புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில்

ஸ்தல வரலாறு

சிவ சிவ

T15530
R005G02
T. 15530



உ

திருச்சிற்றம்பலம்

திருப்பூந்துருத்தி

அ/மி. புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில்

ஸ்தல வரலாறு

ஸ்தல சிறப்பு

சப்தஸ்தான ஸ்தலங்களில் ஆறாவது ஸ்தலமாகும் பாடல் பெற்ற இத்திருக்கோயில், அப்பரால் மடம்அமைக்கப்பட்ட சிறப்புடையது. அப்பரும், சம்பந்தரும் இங்கு தங்கி உழவாரப்பணி புரிந்துள்ளனர். நந்தி விலகியுள்ள இத்தலத்தில், வீணை ஏந்திய தெட்சிணாமூர்த்தி திருமேனி அமையப்பெற்ற சிறப்பு உடையது. திருமால், இலக்குமி, இந்திரன், சூரியன், காசிபர், விஞ்சையர் ஆகியோர் வழிபட்டதிருக் கோயிலாகும். இராமலிங்க சுவாமிகள், அருணகிரி நாதர் ஆகியோரால் பாடப் பெற்ற சிறப்புடையது.

அமைவிடம்

தஞ்சாவூரிலிருந்து திருக்காட்டுப்பள்ளி, கல்லணை செல்லும் வழியில், கண்டியூரை அடுத்து 3 கிலோ மீட்டர் தொலைவில்
என்னும் கிராமத்தில், குடமுருட்
இத்திருக்கோயில் அமைந்துள்ள

T015530
Sarasvati Mahal Library. Thanjavur

பெயர்க்காரணம்

முற்காலத்தில் அகத்தியர் காகம் கவிழ்க்க அதிலிருந்து தோன்றிய காவிரியானது ஆறாகக் கிழக்கு திசை நோக்கி ஓடி, செந்தலையிலிருந்து அந்தலி, வெள்ளாம்பிரம்பூர், ஆற்காடு, கண்டியூர், திருச்சோற்றுத்துறை, திருப்பழனம், திருவையாறு, திருநெய்த்தானம், சாத்தனூர் வரை சூழ இடைப்பட்டுள்ள இடங்களில் கடற்போற் றேங்கி நின்று விட்டது. இதற்கிடையிலுள்ள கோனேரிராஜபுரம், கருப்பூர், நடுக்காவேரி, திருவாலம்பொழில், திருப்பூந்துருத்தி, முதலிய ஊர்கள் எல்லாம் நீர்நிலையில் மூழ்கி இருந்தன. இந்திரன் ஐயாறப்பரை வழிபட்டு காவிரியை அவரருளால் கிழக்கு நோக்கி யழைத்துச் சென்று கழுமலப் பூங்காவினை வளப்படுத்தினான். அவ்வாறு காவிரி கிழக்கு நோக்கி ஓடுகையில் முதலில் காணப்பட்ட நிலப்பகுதி கண்டியூர். பின்னர் ஆற்று வண்டலும் மணலும் படிந்ததாய் தோன்றியது திருப்பூந்துருத்தி, அதற்கு மேற்கே ஆலமர மிருந்ததாக காவிரி எக்கர் நிறைந்து மேடிட்ட பகுதி நிலம் மென்மையாக பூப்போல இருந்ததாலும், மலர்வாட்டத்தில் நிலம் அமைந்திருந்தாலும் “பூந்துருத்தி” என்று இந்நிலப்பரப்பை வழங்கி வந்தனர். இதனை, பொருத நீர்வரு பூந்துருத்தி என்று அப்பர் கூறுகிறார். இது போல் ஆற்றிடையில் உண்டாகும் நிலப்பகுதிக்கு “துருத்தி” என்று பெயர். காவிரியில் கிழக்கே யுண்டாகிய மற்றொன்றிற்கு ‘துருத்தி’ (குற்றாலம்) என தற்காலம் வழங்குகின்றது. ஆதலால் நில அமைப்பு நோக்கி இப்பெயர் ஏற்பட்டது போலும்.

இந்திரன், கௌதமர் சாபத்தால் உடம்பெல்லாம் ஆயிரம் குறிகள் தோன்றப் பெற்ற சாபத்தை திருக்கண்ணார் கோயிலில் வழிபட்டு பிறருக்குக் கண்களாக தெரிய வரம் பெற்றான்.

உடலெல்லாம் கண்ணாகத் தோன்றிய அந்நோயும் தீரவேண்டி பல தலங்களையும் சுற்றி வழிபட்டு வரும்போழ்து மலர்க்காட்டிடையே மகாதேவன் திருவுரு இத்தலத்தில் இருக்கக்கண்டு "பூவின் நாயகனாய்" விளங்கிய பரமனை, மலர்களைக்கொண்டு வழிபாடு செய்து நோய் நீங்கி மலர்போல் தூய நல்லுடல் பெற்றான். ஆதலால் இப்பெயர் பெற்ற தென்பர்.

தேவர்கள் எல்லோரும் மலர்கொண்டு இறைவனை இத்தலத்தில் வழிபட்டதால் இப்பெயர் பெற்றது என்றலுமாம் இதனை 'வானோருலகமெல்லாம் வந்திறைஞ்சி மலர் கொண்டு நின்று போற்றும் வித்தானை' என்று அப்பர் கூறுவதால் அறியலாம். திருமாலும் திருமகளும் இவ்வூரிறைவனை வழிபட்டனர் என்பதை நாயக்க மன்னர் காலத்தில் கட்டப்பெற்ற இராஜகோபுரத்தில் உள்ள சிற்பம் காட்டுகின்றது. பூ மகள் வழிபட்டதால் 'பூந்துருத்தி' என்றலுமாம்.

திருமழபாடி நந்திதேவர் திருமணத்திற்கு மலர்கள் தந்து உதவியதாகவும் அதற்கு திருநந்தி தேவர் வந்து நன்றி கூறுவதாகவும், அமைந்த விழாவே 'ஏழூர் விழா' (சப்தஸ்தான விழா) என்பர் ஆதலாலும் மலரோடு இத்தலம் தொடர்புடைமை நன்கு பொருந்துவதைக்காணலாம். சோழநாட்டில் சில இடங்கள் மலர்த்தோட்டங்களாக இருந்துள்ளன. அவ்விடங்கள் 'மலரி' என்றும் 'மலர்க்காடு' என்றும் வழங்கி வந்துள்ளன.

முற்கால முதல் பிற்காலச் சோழர் தலைநகராகிய தஞ்சைக்கு அருகில் அவர்கள் அடையாள மலராகிய 'ஆர்' ஐ (ஆத்தி) வளர்த்த இடம் 'ஆர்க்காடு' என்று இதன் அருகில் உள்ளது. அதுபோல அரசரது பிற தேவைகட்கு வண்டல் நிறைந்த இத்துருத்தியை பூந்தோட்டமாகச் செய்து இதிலிருந்து மலர்கொண்டனர். ஆதலான் 'மலர்க்காடு'

என்று இதற்கு மற்றொரு பெயருண்டாயிற்று. இதனையே கி.பி. 1782 ஆண்டு தஞ்சை துளசிமகாராஜா காலத்தில் 'புஷ்பவனம்' என்று மொழி பெயர்த்துக் கூறப்பட்டது என்பதை கல்வெட்டால் அறியலம்.

வரலாற்றுக் குறிப்புகள்

இத்தலம் கி.பி. தொடக்க காலத்திலேயே கட்டப்பெற்ற பழமையுடையது. பிற்காலச் சோழ நாட்டில் வளநாட்டில் ஆர்க்காடு கூற்றத்தில் உள்ளது. இங்கு கி.பி. 9-ம் நூற்றாண்டு முதல் 18-ம் நூற்றாண்டு வரை யாண்ட சோழர், பாண்டியர், நாயக்கர், மராட்டிய மன்னர்களில் துளசி மகாராஜா காலம் வரையில் உள்ள பலர் திருப்பணி செய்யப்பெற்றது பற்றிய கல்வெட்டுகள் உள்ளன.

ஆலயதரிசனம்

இராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் கிழக்கு நோக்கியுள்ளது. உள்ளே நுழைந்ததும், பஞ்சமூர்த்தி மண்டபம் பெரிய நந்தி விலகியுள்ளது. அம்மன் சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது. உள்வாயிலைத் தாண்டியதும் வசந்த மண்டபம் மற்றும் காசிவிஸ்வநாதர் சன்னதியை காணலாம். கொடிமரம், பலிபீடம் நந்தி ஆகியவை சன்னதியை விட்டு விலகியவாறு உள்ளன. சுவாமி சன்னதிக்குத் தென்பால் சோமாஸ் கந்த மண்டபமும் அடுத்து நடராசர் சபையுமுள்ளது. உள்பிரகாரத்தில் சப்தமாதர்கள், நால்வர் வரலாற்று சித்திரங்கள், சுப்பிரமணியர் சன்னதி, மகாலக்ஷ்மி சன்னதி, பள்ளியறை காணப்படுகின்றன. கருவறையின் தென்பால் தென்கயிலையும், வடபால் வடகயிலையும் அமையப்பெற்றுள்ளன. வாகனமண்டபம் அர்த்த மண்டபம் அடுத்து மூலவர் தரிசனம்.

மூர்த்திகள்

திருக்கோயில் கொண்டுள்ள இறைவனின் திருநாமம் பொய்யிலியார், ஆதிபுராணன் என்று தேவாரத் திருமுறைகளும், பூந்துருத்தி உடையார், பூந்துருத்தி நாயனார் என்றும் 18-ம் நூற்றண்டில் புஷ்பவனேசர் என்று மொழிபெயர்க்கப்பெற்ற திருநாமமும் வழங்கி வந்துள்ளன.

இறைவியின் திருநாமம் அழகாலமர்ந்த நாயகி என்றும் சௌந்தரநாயகி என்றும் வழங்கி வந்தது. இதனை. "அழகாலமைந்த உருவுடை மங்கையுந் தன்னொருபாலுல காயு நின்றான்" என்று அப்பர் பெருமான் கூறுகின்றார். ஆனால் கி.பி. 1782 லிருந்துதான் சௌந்தர நாயகி என்ற மொழி பெயர்ப்புப் பெயர் வழங்கி வரலாயிற்று என்பது துளசி மகாராஜா கல்வெட்டிலிருந்து அறியலாம்.

ஆலமர் செல்வர் வீணையேந்தி யோகநெறியை மேற்கொண்டு நாதபிர்மத்தில் ஒன்றும் நிலையை போதிக்கின்றார். கொற்றவை துர்க்கை ஒற்றைக் காலில் நின்று மகிடாசூரசம்ஹாரத்தின் பழிபாவங்களை போக்கிக்கொள்ள இறைவனை வழிபட்டுத்தவமிருந்து அவை நீங்கப்பெற்று சாந்தி நிலையை யடைந்தாள். அதற்கான தவவடிவமும் சாந்ததுர்க்கைத் திருஉருவம் அமர்ந்த தோற்றத்திலுமுள்ளன. வேண்டுவார்க்கு வேண்டிய வரந்தந்து வருகின்றாள்.

ஏழூர் சுவாமிகள்

அ/மி புஷ்பவனேஸ்வரர் (திருப்பூந்துருத்தி), அ/மி கிருதபுரீஸ்வரர் (திருநெய்த்தானம்) அ/மி பஞ்ச நதீஸ்வரர் (திருவையாறு) அ/மி ஆபத்சகாயேஸ்வரர் (திருப்பழனம்) அ/மி ஓதவனேஸ்வரர் (திருசோற்றுத்துறை) அ/மி வேதபுரீஸ்வரர்

(திருவேதிகுடி) அ/மி பிரம்மசிரகண்டிஸ்வரர் (கண்டியூர்) ஆகிய திருமேனிகள்.

ஆதிவிநாயகர், சூரியன், பைரவர், சண்டிகேஸ்வரர், சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஆகிய மூர்த்திகளின் திருமேனிகள் அற்புதக்காட்சி தருகின்றன உழவாரப் பணி ஆற்றிய அப்பர் அமர்ந்த தோற்றத்தில் எழுந்தருளியுள்ளார். திருவிசைப்பா பாடிய பூந்துருத்தி நம்பிகாடநம்பியின் திருஉருவமும் உள்ளது.

வீணா தெட்சணாமூர்த்தி

கந்தருவர்களும் நாரதரும் நாத பிரமத்தில் ஒன்றும் நிலையை தமக்கு கற்பித்தருள வேண்டும் என்று சிவபெருமானைக்கேட்க, அவர் பூந்துருத்திக்கு வருக என்றளி இத்தலத்தில் வீணாதர குருநாதராய் எழுந்தருளி நாத பிர்மத்தில் - ஒன்றும் நிலையை தாமே வீணையேந்தி இயற்றிக் காட்டியருளினார். வீணை ஏந்திய தெட்சிணாமூர்த்தியின் திருவுருவம் வேறு எங்கும் காணக் கிடைக்காத அற்புதக் காட்சியாகும்.

சூரியன்

சூரியன் தக்கன் வேள்வியில் ஈடுபட்டதால் உண்டாகிய சிவாபாரதம் நீங்க வேண்டிசர்வபாவ நிவாரணியாகிய காவிரியின் துருத்தியில் மலர்க் காட்டிடையில் இறைவனை அப்பர் மடத்திற்கு வடக்கிலுள்ள சூரிய தீர்த்தத்தில் மூழ்கி வழிபட்டு சிவாபாரதம் நீங்க பெற்றார்.

விஞ்சையர்

விஞ்சையர் இருவர் கழுகாகச்சாபம் பெற்றவர்கள் இருவரும் போரிட்டு வந்து இத்தலத்தின் திருக்கோயிலில் சோர்ந்து விழுந்தனர். பின் மயக்கந் தெளிந்து எழுந்து

புத்துணர்வு பெற்று மலர்களைக்கொண்டு இறைவனை வழிபட்டு கழுகாகிய உருவம் நீங்கப்பெற்று தூய உடம்பு வரப்பெற்று மீண்டும் வழிபாடு செய்து தம் நாடு சென்றனர்.

காசிபர்

காசிபமுனிவர் தாம் யோக நிலையில் ஒன்றமுடியாமல் மலபரிபாகம் வராமல் மாயையில் சிக்கி வழுவித் துன்புற்றார். இத்தலத்தில் வந்து காசி கங்கை முதலாகிய சுகா ஈறாக உள்ள 13 கங்கைகளையும் இங்கு திருக்கோயிலில் ஆதி விநாயகர் சந்நிதியில் உள்ள கிணற்றில் வர பல காலந்தவமிருந்து ஷெ தீர்த்தங்கள் ஆடி அமாவாசையன்று பொங்கி எழ காசிவிசுநாதர் கங்கைக் கரையில் எழுந்தருளிக்காட்சி தந்தருளினார். அத்தீர்த்தத்தால் இறைவனை அபிஷேகித்து வழிபாடு செய்து இறைவன் அருளால் மலபரிபாகமுற்று யோக நெறி கைகூடப் பெற்றார்.

கயிலைக்காட்சி

திருநாவுக்கரசர் பலதலங்களையும் வணங்கி கோயிலை காணும் வேட்கையால் இமயம் கடக்க முனைந்து ‘உற்ற நோய் நோற்று’ உருண்டும் புறண்டும், ஊர்ந்தும் சென்று உணர்வற்றார். பின் இறைவன் அருளால் வாவியில் மூழ்கி திருவையாற்றில் எழுந்து கயிலைக்காட்சியைக் கண்டார்.

அப்பர் திருமடம்

கயிலைக் காட்சியை கண்ட பின்னர் திருவையாற்றில் தொடர்ந்து தங்கி வாழ விரும்பாமல் திருப்பூந்துருத்திக்கு எழுந்தருளி அங்கு ‘திங்களும்’ ஞாயிறும் தோயும் திருமடம் ஒன்று அமைத்துக் கொண்டு செழுமதியந்தவழ் சோலையமைத்தும், உழவாரத் திருப்பணி செய்தும் பலகாலந் தங்கி வாழ்ந்து வந்தார்

சமயத் தொண்டும் செய்து வந்தார் திரு அங்கமாலை முதலான பலதனித் திருத்தாண்டகம் முதலிய திருப்பதிகங்களைப் பாடியருளினார்.

அப்பருக்கு கயிலைகண்ட காட்சியை மீண்டும் காட்டி யருளவேண்டும் என்று இறைவனைக் கேட்க அவர் வடகயிலைக் காட்சியைக் காட்டி யருளினார். அதனைக்கண்டு இன்புற்ற பின்னர். ஐயாற்றில் காட்சியளித்ததையும் காட்டியருள வேண்டினார். அவ்வாறே தென்கயிலைக் காட்சியையும் காட்டியருளினார். திருக்கோயிலுக்கு வடபால் குடமுருட்டியாற்றின் கரையில் அப்பர் அமைத்திருந்த திருமடம் அவர் அமைத்திருந்த முறையிலேயே புதுப்பிக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது.

அப்பர், சம்பந்தரை வரவேற்றல்

தமிழகத்தில் 'திருப்பூந்துருத்தி உபசாரம்' என்ற பழமொழி வழங்கிவருகின்றது, இது அப்பர் சம்பந்தரை வரவேற்று உபசரித்த முறையை போற்றியே ஏற்பட்டது எனலாம்.

மதுரையில் சைவம் புதுக்கிப் பரப்பிய திருஞான சம்பந்தர் பாண்டியநாடு நீங்கி அப்பர் கயிலை கண்டு மீண்டது கேட்டு அவரைக் காண வேட்கைக்கொண்டு திருப்பூந்துருத்தி நோக்கி வந்து கொண்டிருந்தார் சம்பந்தர் வருகையை அறிந்த அப்பர் தொண்டர்களோடு எதிர்கொள்ள 2 கல் தொலைவிலுள்ள வெள்ளாம் பிரம்பூருக்குச் சென்றார். சம்பந்தர் அவ்வூர் இறைவனை வழிபட்டு வரும் வழியில் அடியார்களுடன் 'சம்பந்தர் மேடு' என்று தற்காலம் வழங்கிவரும் இடத்திற்கருகில் எதிர் கொள்ளும் கூட்டத்தினரைக் கண்டார் அடியார் செறிவில் நுழைந்த அப்பரடிகள் ஆண்டவன் தந்த முத்துச்

சிவிகையைத் தாங்கிச் சுமந்து வரவும், அரிய செயல் செய்து வரும் ஞானக் குழந்தையைத் தாம் தூக்க வேண்டும் என்ற வேட்கையாலும் முத்துச் சிவிகையைச் சுமந்து வந்தார். கூட்டம் நகர ஆரம்பித்ததும் சம்பந்தர் 'அப்பர் எங்குற்றார்' என்று வினவினார். உடனே அப்பரடிகள் "நும்மடி தாங்கி வரும் பெருவாழ்வு பெற்று இங்குற்றேன்" என்று கூறியருளினார் உடனே, சம்பந்தர் சிவிகை விட்டுக்குதித்து அப்பரை வணங்கினார். (சர்வே நெ. 235-2 ஸெண்ட் 23 புறம்போக்கு) அப்பரும் சம்பந்தரை வணங்கினார். பிரிந்ததந்தை மகனைக் கண்டாலொத்த உவகையை இருவரும் ஒருங்கே எய்தினார், சம்பந்தர் அதுமுதல் அப்பருடன் நடந்தே திருப்பூந்துருத்திக்கு வரும் வழியில் திருவாலம்பொழில் இறைவனைப் பதிகம்பாடி வழிபட்டுப்பின் பூந்துருத்தி வந்தடைந்தார்.

திரு நந்தி விலகல்

சம்பந்தர், அப்பருடன் ஆலயத்திற்கு முன் வந்தார், மெய்ப்பாடுகொண்டு தொண்டாற்றிய அப்பரின் உழவார அருந்தொண்டு ஆற்றிய இடத்தை தம் காலால் மிதிக்க அஞ்சிய திருஞானசம்பந்தர் கோயிலின் கோபுரத்தின் புறத்தே நின்று வழி படலானார் எதிரே திரு நந்திதேவர் மறைத்தருளுவதால் இறைவனை தரிசிக்க வியலவில்லை, இறைவன் ஞானப் பிள்ளைக்குக் காட்சிதர அருள்கூர்ந்து நந்திதேவரை வலப்பால் விலக ஆணையிட்டு, நந்திதேவர் விலக நன்முறையில் காட்சி கொடுத்தருளினார். இறைவனை இருவரும் வழிபட்டுத் திருமடம் சென்றதும் அறுசுவையமுதளித்து விருந்து புரந்தருளினார். சில நாட்கள் இருவரும் தங்கிச் சமயத்தொண்டு புரிந்து வந்தனர்.

திருநந்திதேவருக்கு மலரளித்தல்
(சப்தஸ்தான திருவிழா)

திருமழபாடியில் திருஐயாறப்பரால் திருமணங் கொண்டருளும் திருநந்தி தேவர் திருமணத்திற்கு திருப்பழனத்திறைவன் பழங்கள் முதலியன அளித்தருளினார். திருச்சோற்றுத்துறை இறைவன் திருவமுது அளித்தருளினார், திருவேதிகுடி ஈசன் வேதியர்களையனுப்பி உதவினார். திருக்கண்டியூர் வீரட்டர் மகர கண்டிகை முதலாகிய திருவாபரணங்கள் தந்தருளினார். திருப்பூந்துருத்திப் பெருமான் புஷ்பங்கள் கொடுத்தருளினார். திருநெய்த்தான நாதர் நெய் முதலியன அளித்தருளி திருமணத்தை நன்முறையில் நடத்தி வைத்தனர். அதற்கு நன்றி கூறவே நந்தி தேவர் ஐயாறப்பர் முதலியோர் ஏழு தலத்திற்கும் எழுந்தருளி வருகின்றனர். அஃதே சப்தஸ்தான விழா எனப்படும், இங்கு நெய்த்தான இறைவர் தவிர மற்றவர்கள் எல்லோரும் எழுந்தருளுவர்.

நம்பி காட நம்பி

திருப்பூந்துருத்தியில் நம்பி என்ற குடியினர் வாழ்ந்து வந்தனர். அவருள் நம்பிகாட நம்பி என்பவர் சைவசமயத் தொண்டை முதல் இராஜராஜன் காலத்தில் செய்து வந்தார். இவர் பாடிய திருப்பதிகங்கள் ஒன்பதாந் திருமுறையில் சேர்க்கப்பெற்றுள்ளன. இவருக்காக இராஜராஜன் முற்றூட்டளித்ததாகத் தெரிகிறது. அவர் திரு உருவம் கோயிலில் எழுந்தருளுவிக்கப்பெற்றுள்ளது.

அருணகிரி நாதர்

முருகபக்தர் அருணகிரியார் இத்தலத்திற்கும் எழுந்தருளி வழிபட்டுத் திருப்புகழ் பாடியுள்ளார்.

இராமலிங்க அடிகள்

வடலூர் இராமலிங்க அடிகளார் இத்தலத்திற்கும் எழுந்தருளி இறைவனை வழிபட்டுப் பாடியுள்ளார்.

"சீல நிறை வாந்துருத்தி கொண்டுள்ளனலெழுப்புவோர் புகழும் பூந்துருத்தி மேவுசிவ புண்ணியமே." (அருட்பா)

மகான் தீர்த்த நாராயணர்

கி.பி. 18-ம் நூற்றாண்டின் தொடக்க காலத்தைச் சேர்ந்த இம்மகான் வடநாட்டில் கிரிதுர்க்கம் எனும் சிற்றூரில் அவதரித்தவர் அனந்த பத்பநாபன் எனும் இயற்பெயருடையவர் பலதலங்களுக்கு சென்று இறைவனை வழிபட்டு வரும்வழியில், ஜகந்நாதத்தில் இறைவனது அசிரீரிவாக்காக "தீர்த்தநாராயணன்" எனும் பெயர் பெற்றவர். கஞ்சனூர் இறைவன் அக்னீஸ்வரர், இம்மகானின் கர்மமூட்டையை சாம்பலாக்கி, இவரை பிரம்மஞானியாய் - ஈஸ்வர சொரூபியாய் மாற்றியருளினார். சஞ்சாரத்தின்போது பல அற்புத திருவிளையாடல்கள் புரிந்தார் இறுதியாக, திருப்பூந்துருத்தி வந்து, ஒரு மாமர நிழலில் தங்கி பக்தர்களுக்கு அருள் பாலித்த இம்மகான், சிலகாலம் கழித்து, இங்கேயே ஜீவசமாதியடைந்தார் இவரது திருக்கோயிலுக்கருகில் சுமார் 400 வயதுடைய மாமரமும், அக்னீதீர்த்தமும் உள்ளன. மகான் தீர்த்த நாராயணரின் பக்தர்களுள் தஞ்சாவூர் மன்னர் துளஜாஜி மகாராஜாவும் ஒருவராவார்.

இதர மடங்கள்

கீழத் திருப்பூந்துருத்தியில் ஸ்ரீ சங்கரசுவாமிகள் திருமடமும், மேலத்திருப்பூந்துருத்தியில் உயர் பாவா சுவாமிகள் முக்தியடைந்த விருப்பாட்சி திரு மடமும் அமைந்துள்ளன.

பொது விவரங்கள்

இறைவன் : அருள்மிகு புஷ்பவனேஸ்வரர்

இறைவி : அருள்மிகு. சௌந்தர நாயகி

தலமரம் : வில்வம்

திர்த்தம் : காசி, கங்கை, காவிரி, சூரிய புஷ்கரணி, அக்னிதிர்த்தம் முதலியன

பாடல் : 1. அப்பர்
2. அருணகிரிநாதர்
3. இராமலிங்க அடிகள்

பூஜை காலங்கள் : காலை சந்தி, உச்சிகாலம், சாயரட்சை, அர்த்த ஜாமம்.

திருவிழாக்கள் : சப்தஸ்தான திருவிழா, நவராத்திரி, கந்தசஷ்டி, திருக்கார்த்திகை, திருக்கல்யாணம், திருவாதிரை, மகாசிவராத்திரி, பாரிவேட்டை போன்றவை

திருக்கோயில் பரப்பளவு : 3 ஏக்கர் - 39 சென்ட்

குடமுழுக்கு நடைபெற்ற நாள் : 20.03.1992

நிர்வாக விவரங்கள்

பட்டியலைச் சார்ந்த இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இணை ஆணையர் :

திரு. ச. **இளங்கோ** பி.ஏ. பி.எல்.,

உதவி ஆணையர் :

திரு. **எஸ் ஜெயராமன்** எம்.ஏ.பி.எல்.,

ஆய்வர் / தக்கார் :

திரு. **ப. முத்தையா** பி.ஏ.

நிர்வாக அதிகாரி:

திரு. **இராமு. பழனியப்பா** பி.ஏ. பி.எல்.,

திருக்கோயில் கணக்கர் :

G. விஜயராஜன்

மற்றும் ஆலய உறுப்பினர்கள்

இந்நூலை ஞானதானமாக வழங்கியவர்;

துறவி கணேசனார் அவர்கள்

திருப்பூந்துருத்தி அப்பர் திருமட திருப்பணி,

சதய விழா பொறுப்பாளர்

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருத்தாண்டகம்

நில்லாத நீர்சடைமேல் நிற்பித்தானை நினையாவென் நெஞ்சை நினைவித் தானைக், கல்லா தனவெல்லாங் கற்பித் தானைக் காணா தனவெல்லாங் காட்டினானைச் சொல்லா தனவெல்லாஞ் சொல்லியென்னைத் தொடர்ந்திங் கடியேனை யாளாக் கொண்டு, பொல்லாவென் நோய்தீர்த்த புனிதன் தன்னை புண்ணியனைப் பூந்துருத்திகண்டேன் நானே.

குற்றாலங் கோகரணம் மேவி னானைக் கொடுங்கைக்கடுங் கூற்றைப் பாய்ந்தான் தன்னை, உற்றால நஞ்சுண்டொடுக்கினானை உணராவென் நெஞ்சை உணர்வித்தானைப் பற்றாலின் கீழங்கிருந்தான் தன்னைப் பண்ணார்ந்த வீணை பயின்றான் தன்னைப், புற்ற டரவார்த்த புனிதன்தன்னைப் புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

எனக்கென்றும் இனியானை யெம்மான் தன்னை யெழிலாகும் ஏகம்பம் மேயான் தன்னை மனக்கென்றும் வருவானை வஞ்சர் நெஞ்சில் நில்லானை நின்றியூர் மேயான்தன்னைத், தனக்கென்றும் அடியேனையாளாக் கொண்ட சங்கரனைச் சங்கவார் குழையான் தன்னைப், புனக்கொன்றைத் தாரணிந்த புனிதன் தன்னை பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

வெறியார் மலர்க்கொன்றை சூடினானை வெள்ளானை வந்திறைஞ்சும் வெண்காட்டானை, அறியா தடியே கைப் பட்டேனை அல்லற் கடல் நின்றுமேற வாங்கி, நெறிதானிதுவென்று காட்டினானை நிச்சல் நலிபிணிகள் தீர்ப்பான் தன்னைப், பொறியா டரவார்த்த புனிதன் தன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

மிக்கானை வெண்ணீறு சண்ணித்தானை விண்டார் புரமூன்றும் வேவ நோக்கி, நக்கானைநான் மறைகள் பாடினானை நல்லார்கள் பேணிப் பரவ நின்ற , தக்கானைத் தண்தா மரைமே லண்ணல் தலை கொண்டு மாத்திரைக் கண் உலகமெல்லாம், புக்கானைப் புண்ணியனைப் புனிதன் தன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

ஆர்த்தானை வாசுகியை அரைக்கோர் கச்சா அசைத்தானை அழகாய பொன்னார் மேனிப்பூத்தானத்தான் முடியை ப் பொருந்தா வண்ணம்புணர்த்தானைப் பூங்கணை யா னுடலம் வேவப், பார்த்தானை பரிந்தானைப் பனிநீர்க் கங்கை படர்சடைமேற் பயின்றானைப் பதைப்ப யானை, போர்த்தானைப் புண்ணியனைப் புனிதன் தன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

எரித்தானை எண்ணார் புரங்கள் மூன்றும் இமைப்பளவிற் பொடியாக எழிலார் கையால், உரித்தானை மத கரியை யுற்றுப்பற்றி யுமையதனைக் கண்டஞ்சி நடுங்கக் கண்டு, சிரித்தானைச் சீரார்ந்த பூதஞ்சூழத் திருச்சடைமேல் திங்களும்பாம்பும் நீரும்புரித்தானைப் புண்ணி யனைப் புனிதன் தன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

வைத்தானை வானோ ருலக மெல்லாம் வந்திறைஞ்சி மலர்கொண்டு நின்று போற்றும், வித்தானை வேண்டிற் றொன் றீவான் தன்னை விண்ணவர்தம் பெருமானை வினைகள் போக, உய்த்தானை ஒலிகங்கை சடைமேற் றாங்கி யொளித் தானை ஒருபாகத் துமையோ டாங்கே, பொய்த்தானை புண்ணியனைப் புனிதன் தன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

ஆண்டானை வானோ ருலக மெல்லாம் அந்தா ளறியாத தக்கன் வேள்வி, மீண்டானை விண்ணவர்களோடுங் கூடி விரைமலர் மேல் நான் முகனும் மாலுந்தேர, நீண்டானை நெருப்புருவ மானான் தன்னை நிலையிலார் மும்மதிலும் வேவ வில்லைப், பூண்டானைப் புண்ணியனைப் புனிதன் தன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

மறுத்தானை மலைகோத்தங் கெடுத்தான் தன்னை மணி முடியோடிருபது தோள் நெரியக்காலால், இறுத்தானை எழுநரம்பி னிசைகேட் டானை எண்டிசைக்குங் கண்ணா னான் சிரமே லொன்றை, அறுத்தானை அமரர்களுக் கமுதீந்தானையாவர்க்குந் தாங்கொணா நஞ்சமுண்டு, பொறுத்தானைப் புண்ணியனைப் புனிதன் தன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

திருக்குறுந்தொகை

கொடிகொள் செல்வ விழாக்குண லைஅறாக்
கடிகொள் பூம்பொழிற் கச்சிஏ கம்பனார்
பொடிகள் பூசிய பூந்துருத் திந்நகர்
அடிகள் சேவடிக் கீழ்நா மிருப்பதே

ஆர்த்த தோலுடை கட்டியோர் வேடனாய்ப்
பார்த்த னோடு படைதொடு மாகிலும்
பூத்த நீள் பொழிற் பூந்துருத் திந்நகர்த்
தீர்த்தன் சேவடிக் கீழ்நா மிருப்பதே

மாதி னைமதித் தானொரு பாகமாக்
காத லாற்கரந் தான்சடைக் கங்கையைப்
பூத நாயகன் பூந்துருத் திந்நகர்க்
காதி சேவடிக் கீழ்நா மிருப்பதே

மூவ னாய்முத லாய் இவ் வுலகெலாம்
காவ னாய்க்கடுங் காலனைக் காய்ந்தவன்
பூவின் நாயகன் பூந்துருத் திந்நகர்த்
தேவன் சேவடிக் கீழ்நா மிருப்பதே

செம்பொ னேயொக்கும் மேனியன் தேசத்தில்
உம்ப ரார்அவ ரோடங் கிருக்கிலும்
பொன்பொ னார் செல்வப் பூந்துருத் திந்நகர்
நம்பன் சேவடிக் கீழ்நா மிருப்பதே

வல்லம் பேசி வலிசெய்முன் றூரினைக்
கொல்லம் பேசிக் கொடுஞ்சரம் றூறினான்
புல்லம் பேசியும் பூந்துருத் திந்நகர்ச்
செல்வன் சேவடிக் கீழ்நா மிருப்பதே

ஒருத்த னாய்உல கேழுந் தொழநின்று
பருத்த பாம்பொடு பால்மதி கங்கையும்
பொருத்த னாகிலும் பூந்துருத் திந்நகர்
திருத்தன் சேவடிக் கீழ்நா மிருப்பதே

அதிரர் தேவர் இயக்கர் விச்சாதரர்
கருத நின்றவர் காண்பரி தாயினான்
பொருத நீர்வரு பூந்துருத் திந்நகர்ச்
சதுரன் சேவடிக் கீழ்நா மிருப்பதே

செதுக ராமனத் தார்புறங் கூறினும்
கொதுக ராக்கண்ணி னோன்பிகள் கூறினும்
பொதுவின் நாயகன் பூந்துருத் திந்நகர்க்
கதிபன் சேவடிக் கீழ்நா மிருப்பதே

துடித்த தோள் வலி வாளரக் கன்தனைப்
பிடித்த கைஞ்ஞெரிந் துற்றன கண்ணெலாம்
பொடிக்க வூன்றிய பூந்துருத் திந்நகர்ப்
படிக்கொள் சேவடிக் கீழ்நா மிருப்பதே.

மாலினை மாலுற நின்றான் மலைமகள் தன்னுடைய
பாலனைப் பால்மதி சூடியைப் பண்புண ரார்மதில்மேல்
போலனைப் போர்விடையேறியைப் பூந்துருத் திம்மகிழும்
ஆலனை ஆதிபு ராணனை நானடி போற்றுவதே
மறியுடைய யான்மழு வாளினன் மாமலை
மங்கையொர்பால்
குறியுடையான் குண மொன்றறிந் தாரில்லை கூறிலவன்
பொறியுடைவாளர வத்தவன் பூந்துருத் தியுறையும்
அறிவுடை ஆதி புராணனை நானடி போற்றுவதே
மறுத்தவர் மும்மதில் மாயவொர் வெஞ்சிலை
(கோத்தொரம்பால்
அறுத்தனை ஆலதன் கீழினை ஆல்விட முண்டதனைப்
பொறுத்தனைப்பூதப்படையனைப்பூந்துருத்தியுறையும்
நிறத்தனை நீல மிடற்றனை யானடி போற்றுவதே
உருவினை ஊழி முதல்வனை ஓதி நிறைந்துநின்ற
திருவினைத் தேசம் படைத்தனைச் சென்றடைந் (தேனுடைய
பொருவினை யெல்லாந் துரந்தனைப் பூந்துருத்
தியுறையும்
கருவினைக்கண்முன்றுடையனையானடி போற்றுவதே
தக்கன்றன் வேள்வி தகர்த்தவன் சாரமதுவன்றுகோள்
மிக்கனமும் மதில்வீயவோர் வெஞ்சிலை
கோத்தொரம்பால்
புக்கனன் பொன்திகழ்ந் தன்னதொர் பூந்துருத்தியுறையும்
நக்கனை நங்கள் பிரான்றனை நானடி போற்றுவதே
அருகடை மாலையுந் தா்னுடையானழ காலமைந்த
உருவுடை மங்கையுந் தன்னொரு பாலுல காயு நின்றான்
பொருபடை வேலினன் வில்லினன் பூந்துருத் தியுறையும்
திருவுடைத் தேச மதியனை யானடி போற்றுவதே

மன்றியும் நின்ற மதிலரை மாய வகைகெடுக்கக்
கன்றியும் நின்று கடுஞ்சிலை வாங்கிக் கனலம்பினால்
பொன்றியும் போகப் புரட்டினன் பூந்துருத் தியுறையும்
அன்றியுஞ் செய்த பிரான்றனை யானடி போற்றுவதே

மின்னிறம் மிக்க இடையுமை நங்கையொர் பால்
மகிழ்ந்தான்
என்னிற மென்றம ரர்பெரி யாரின்னந் தாமறியார்
பொன்னிற மிக்க சடையவன் பூந்துருத் தியுறையும்
என்னிற வெந்தை பிரான்றனை யானடி போற்றுவதே

அந்தியை நல்ல மதியினை யார்க்கும் அறிவரிய
செந்தியை வாட்டுஞ்செம் பொன்னினைச் சென்றடைந்
தேனுடைய
புந்தியைப் புக்க அறிவினைப் பூந்துருத் தியுறையும்
நந்தியை நங்கள் பிரான்றனை நானடி போற்றுவதே

பைக்கையும் பாந்திவி ழிக்கையும் பாம்பு சடையிடையே
வைக்கையும் வானிழி கங்கையும் மங்கை நடுக்குறவே
மொய்க்கை அரக்கனை யூன்றினன் பூந்துருத் தியுறையும்
மிக்கநல் வேத விகிர்தனை நானடி போற்றுவதே

திருநாவுக்கரசர் (நான்காம் திருமுறை)

அருகடை மாலையுந் தானுடை
யானழ காலமைந்த
உருவுடை மங்கையுந் தன்னொரு
பாலுல காயுநின்றான்
பொருபடை வேலினன் வில்லினன்
பூந்துருத் தியுறையும்
திருவுடைத் தேச மதியனை
யாமடி போற்றுவதே.

ஐந்தாந்திருமுறை

கொடிகொள் செல்வ விழாக்குண லைஅறாக்
கடிகொள் பூம்பொழிற் கச்சியே கம்பனார்
பொடிகள் பூசிய பூந்துருத் திந்நகர்
அடிகள் சேவடிக் கீழ்நா மிருப்பதே

துடித்த தோள்வலி வாளரக் கன்தனைப்
பிடித்த கைஞ்ஞெரிந்(து) உற்றன கண்ணெலாம்
பொடிக்க வூன்றிய பூந்துருத் திந்நகர்ப்
படிக்கொள் சேவடிக் கீழ்நாம் இருப்பதே

ஆறாந்திருமுறை

வைத்தானை வானோ ருலக மெல்லாம்
வந்திறைஞ்சி மலர்கொண்டு நின்றுபோற்றும்
வித்தானை வேண்டிற்றொன் றீவான் தன்னை
விண்ணவர்தம் பெருமானை வினைகள் போக
உய்த்தானை ஒலிகங்கை சடைமேல்தாங்கி
ஒளித்தானை ஒருபாகத்து உமையோ டாங்கே
பொய்த்தானைப் புண்ணியனை புனிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்தி கண்டேன் நானே

நேர்த்தொருத்தி ஒருபாகத் தடங்கக் கண்டு
நிலைதளர ஆயிரமா முகத்தி னோடு
பாய்ந்தொருத்தி படர்சடைமேற் பயிலக் கண்டு
படஅரவும் பனிமதியும் வைத்த செல்வர்
தாந்திருத்தித் தம்மனத்தை ஒருக்கா தொண்டர்
தனித்தொருதண் டூன்றிமெய் தளரா முன்னம்
பூந்துருத்தி பூந்துருத்தி என்பீராகில்
பொல்லாப் புலால்துருத்தி போக்கலாமே



ஸ்ரீ அபிராமி பிரிண்டர்ஸ், திருக்காட்டுப்பள்ளி.